1993 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நான்கு ஆம்புலென்ஸ்கள் இருக்குமே யானால் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யலாம். ஆனால் இரண்டு தான் இருக்கிறது என்று சொல்லி, திருவாரூரைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவிக்கிறார்கள். இரண்டு வண்டிகள்தான் இருக்கின்றன என்று தெரிவிக்கிறார்கள். எனவே, அங்கேயிருந்து வண்டியை அனுப்புவதற்கு வாய்ப்பு இருக்குமா என்று தெரியவில்லை. எனவே, தனியாக இதைப்பற்றி ஆய்வு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 525, திரு நா. சா. பழனிசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

525—

சந்தன மரங்களை தனியார் நிலங்களில் வளர்க்க அனுமதி வழங்கல்.

*10616—திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சந்தன மரங்களை தனியார் நிலங்களில் வளர்க்க அரசு அனுமதி வழங்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சந்தன மரங்களை தனியார் நிலங்களிலே வளர்க்க அரசு அனுமதி பெறத் தேவையில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தேக்கு மரங்கள் வளர்ப்பதிலே பல கம்பெனிகள் ஈடுபட்டிருப்பதைப்போல சந்தன மரத்தையும் தனியார் வளர்ப்பதற்கு அரசுக்குத் தடையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். தடை இல்லை என்று சொல்வதை வரவேற்கிறேன். ஆனால், அந்தச் சந்தன மரம் வளர்ப்பது, எந்த முறையிலே வளர்க்க வேண்டும், சந்தன மரத்திற்கு வேண்டிய கன்றுகளை வன இலாக்காவின் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கி இப்பொழுது சோஷ்யல் ஃபாரஸ்ட்ரி போன்ற திட்டங்கள் இருப்

பதாலே சந்தன மரங்களையும், கன்றுகளையும் கொடுத்தால் அதை எந்த முறையிலே வளர்ப்பது என்ற தொழில் நுட்பத்தைச் சொல்லிக் கொடுப்பீர்களேயானால் இன்றைக்கு விவசாயத்திலே தானியப் பயிர்களைச் செய்து நஷ்டம் அடைகின்ற விவசாயி களுக்கு ஒரு பகுதி நிலத்திலே மரங்களை, அதிலும் குறிப்பாக இன்றைக்கு விலை மதிப்புள்ள மரமாக இருக்கிற இந்தச் சந்தன மரத்தை வளர்ப்பதற்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன நாற்றுக்கள் நம்மிடத்திலே இல்லை. அதற்குக் காரணம், நேச்சுரலாக, இயற்கையாக வளரக்கூடிய மரங்கள்தான் சந்தன மரங்கள். அவற்றைப் பயிரிட்டு, விதைகளைப் போட்டு வளர்க்கக்கூடிய சூழ்நிலை எங்கும் இல்லை. ஆகவேதான், இந்தியத் துணைக் கண்டத்திலே பார்க்கிறபோது, அவை தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் கொஞ்சம் இருக்கிறதே தவிர, வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்கிற நிலைமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, கேட்டார்கள். யார் வேண்டுமானாலும் வளர்த்துக் கொள்ளலாம். அதிலே அரசுக்கு எந்தத் தடையும் கிடையாது. ஆனால், வளர்கிற சந்தன மரங்களை விற்கிறபோது, அரசு அனுமதி பெற்று, இருக்கிற விலையில் $47\frac{1}{2}$ சதவிகிதத்தை நஷ்ட ஈடாகக் கொடுத்து, அதை விற்க வேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறது. பாதி விலைதான் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்களை வளர்ப்பதற்கு வேண்டிய தொழில் நுட்பம், அதற்கு வேண்டிய விதை அல்லது கன்றுகள் ஆகியவற்றை வன இலாகா கொடுப்பதற்கு வேண்டிய வாய்ப்பு இல்லை என்று சொல்லிவிட்ட பிறகு, அதை தனியார் சிலர் வளர்க்கிறபோது, அவற்றின் கட்டைகளை வெட்டுகிறபோது கிடைக்கிற லாபத்திலே பங்கு கொடுப்பது என்பது நியாயமாகப்படவில்லை. மற்ற மரங்களை வளர்க்கிற போது எல்லாம் எந்தவித பங்கும் கேட்காத அரசு, இந்த சந்தன மரங்களை, தனியார் துறை ஈடுபட்டு வளர்க்கிறபோது, அதிலேயும் பங்கு கேட்கக் கூடாது எனக் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே, நம்முடைய வேளாண்மைப் பல்கலைக் கழகம் போன்ற, மற்றும் வன இலாகா போன்றவைகள் எல்லாம் இதிலே ஆராய்ச்சியில் ஈடுபட்டு, விவசாயிகள் வளர்ப்பதற்கு உகந்த சந்தனக் கன்றுகளைக் கொடுத்து உதவுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல, என்னுடைய தொகுதிக்கு அருகிலே இருக்கிற கேரளா மாநிலத்தின் எல்லையிலே இரண்டு

1993 ஏப்ரல் 29]

சந்தன ஆலைகளை வைத்து, அங்கிருக்கிற சந்தன மரங்களை எல்லாம் கடத்துவதற்கு அவர்கள்தான் காரணமாக இருக்கிறார்கள். அதையும் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு கடுமையான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், இன்றைக்கு சந்தனக் கட்டைகளைக் கடத்துகிறவர்கள் ஏறத்தாழ 313 பேரை, குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்ட சரித்திரம், புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏறத்தாழ 22 கோடி ரூபாய்—என்னிடத்தில் புள்ளி விவரங்கள் இல்லை—சுமார் 22 கோடி ரூபாய்க்கு மேலே சந்தனக் கட்டைகள் கடத்தியதை நாங்கள் பறிமுதல் செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, தானாகவே வளரக்கூடிய, இயற்கையாகவே வளரக்கூடிய அந்த சந்தன மரங்களிலே வரக்கூடிய லாபத்தை, அந்த விவசாயிகளுக்குத் தராமல், அவர்களிடத்திலே $47\frac{1}{4}$ சதவிகிதம் தருவது நியாயம்தானா என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் இதைச் சொல்வதற்கு காரணம், இயற்கையாக வளரக்கூடிய அந்த சந்தன மரங்களை குறிப்பிட்ட இடங்களில் விற்க வேண்டுமென்ற விதிமுறைகள் இருக்கின்றன. நீங்கள் குறிப்பிட்டதைப் போல, சந்தன மரங்கள் திருட்டுப் போகின்றன என்று சொன்னது, தனியாரிடத்திலேதான் சில மரங்கள் திருட்டுப் போகிற சூழ்நிலை இந்த ஆட்சியிலே நிலவிக்கொண்டிருக்கிறதே தவிர, வன இலாகாவிலே திருட்டுப் போகாத அளவுக்கு கடுமையான நடவடிக்கைகளை நாம் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறபோது, யார், யார் லைசன்ஸ் வைத்திருக்கிறார்கள் என்றார்கள். அவற்றை எப்படியெல்லாம் விற்பது என்ற வழிமுறைகள் தனியாருக்குத் தெரியாது. தனியாரிடத்திலே 5 கிலோவுக்கு மேலே சந்தனக் கட்டைகளை வைத்துக் கொள்ளக் கூடாது என்று அரசிடத்திலே விதிமுறைகள் இருக்கின்றன. ஆகவே, அரசு இதை ஏற்று, எவ்வளவு கிலோ அங்கே இருக்கின்றன என்பதை எடை போட்டுப் பார்த்து, அதற்குப் பிறகுதான் அந்தத் தொகையைக் கொடுக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே முதல்தரமான சந்தன மரங்கள் என்னுடைய திருப்பத்தூர் தொகுதியிலே, ஜவ்வாது மலை

யிலேதான் விளைகின்றன. ஜவ்வாது மலையில் வசிக்கிற மலை வாசி மக்கள் சந்தன மரங்களை வளர்க்க, அவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம் திருப்பத்தூரில் உள்ள ஜவ்வாது மலையிலே, 10-6-1907 -ஆம் நாள் சிலபேருக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, அங்கே இயற்கையாக விளைகின்ற சந்தன மரங்களை அரசு நிர்ணயிக்கின்ற விலையிலே எடுத்துக் கொள்வதற்குத் தயக்கம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சந்தன மரம் இருக்கிற தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர்கள்தான் இதுகுறித்துக் கேட்பது நல்லது. வெறும் சீமைக் கருவேல மரம் இருக்கிற தொகுதிகள் என்று கேட்டால், எல்லோரும் கேட்கலாம். (சிரிப்பு) திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியில் குறிப்பாக ஜவ்வாது மலையில் இருக்கும் மலைக் கிராமங்களில் வாழும் மலைவாழ் மக்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோன்று, அவர்களுடைய பட்டா நிலங்களில் வளர்ப்பதற்கு மட்டும் அனுமதி தந்து, அவர்களுடைய பொருளாதாரத்தைப் பெருக்குவதற்காக, குறிப்பாக அந்த ஜவ்வாது மலையில் இருக்கும் மலைவாழ் மக்களின் பட்டா நிலங்களில் பயிர் செய்வதற்கு அனுமதி அளித்து, அந்த மரங்களை அரசே என்ன விலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமோ அந்த விலைக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இயற்கையாக வளரக் கூடிய மரங்கள். ஆகவேதான் நான் குறிப்பிட்டுச் சொன்னேன் நீங்கள் வளர்ப்பது அல்ல. குறிப்பிட்ட இயற்கைச் சூழ் நிலைக்கேற்ப, அந்த மண்ணின் தன்மைக்கேற்ப, சீதோஷ்ண நிலைக்கேற்ப, அந்த மரங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தியத் துணைக் கண்டத்திலே பார்க்கின்றபோது, ஜவ்வாது மலை போன்ற பகுதிகள், பல்வேறு மாவட்டங்கள் என்று பார்க்கின்றபோது தர்மபுரி, சேலம், திருச்சி, இராமநாதபுரம், திருநெல்வேலி, உதகமண்டலம், பெரியார் போன்ற இடங்களில் இருக்கின்றன. ஆகவேதான் மாண்புமிகு அமைச்சர்கள் உறுப்பினர் அவர்களுக்குக் குறிப்பிடுகிறபோது உங்களுக்கு ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்னாலே பட்டாக்கள் வழங்கப்பட்டிருந்தால், இயற்கையாகவே அந்த மரங்கள்

1993 ஏப்ரல் 29]

வளர்ந்திருந்தால், அந்த மரங்களை அரசு நிர்ணயிக்கின்ற விலையிலே வெட்டிக்கொள்ள ஆட்சேபணை இல்லை என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசாங்க முறையில் நர்சரிகள் இல்லை என்று சொன்னார்கள். நான் கர்நாடக மாநிலத்தில் பணியாற்றுகின்றபோது அங்குள்ள வன இலாக்காவினர் இந்த சந்தன மரங்களுக்கு நர்சரி உள்ளது என்றார்கள். எனவே, அப்படிப்பட்ட நர்சரிகளை அங்கிருந்து பெற்று என்னுடைய தொகுதியிலே ஒரு காலத்தில் சந்தனக் கட்டைகள் அதிகமாக இருந்தது. இப்போது சந்தனக் கட்டைகளே இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட மரங்களை வளர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலே ஒரு ஆராய்ச்சிப் பண்ணை இருக்கிறது. அந்த ஆராய்ச்சிப் பண்ணையிலே சந்தன மரங்களை வளர்க்கலாமா என்ற ஆராய்ச்சி செய்தோம். அது வெற்றிகரமாக அமையவில்லை. வளர்க்க முடியாது என்ற சூழ்நிலைக்கான புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் கொடுக்கின்ற புள்ளி விவரங்கள் தவறானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : ''தினை விதைத்தவன் தான் தினை அறுப்பான்'' என்று பழமொழி இருக்கிறது. விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற அந்த சந்தன மரம், தேக்கு மரம் போன்றவைகளுக்கு அரசாங்கம் எந்த உதவியும் செய்வது இல்லை. ஆனால் அவைகள் அரசாங்கத்திற்கு வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுக்குக் கிடைக்கின்ற வகையிலே அரசு அதை மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரம் மிகவும் விலை உயர்ந்தது. அதிக விலை கொடுக்கக்கூடிய, இயற்கையாக வளரக் கூடிய மரம். தனியாரிடத்திலே அது எப்படி விற்கப்பட வேண்டும் என்று விதிமுறைகள் இருக்கின்றன. தனியார்களிடத்திலே இருக்கிற மரத்தை மற்றவர்கள் திருடுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தினால்

வனத்துறையின் சார்பாக நடவடிக்கை எடுப்பதற்குத் தடைச் சட்டம் இருக்கிறது. இதைக் கருத்தில்கொண்டு 47.50 சதவிகிதம்தான் விற்கப்படுகின்ற விலையிலே கொடுக்கப் படும். அதை மாற்றுவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஞ்ஞானம் எவ்வளவோ முன்னேறி விட்டது. Culture என்ற முறையில் மனிதனுடைய தோலில் 1 மி.மீ. இருந்தால்கூட, அதை 3 மி.மீ. அளவுக்கு வளர்த்து, தீக்காயங்களுக்கு அதைப் போட்டுச் சரி செய்கி றார்கள். அதைப்போல, ஒரு மரமோ, அல்லது செடியோ அதனுடைய வேரின் சிறு பகுதியோ அல்லது தண்டின் சிறுபகுதியோ அல்லது இலையின் சிறு பகுதியோ 1 மி.மீ. இருந்தால் அதை—வெளிநாடுகளில் சந்தன மரங்கள் அதிகமாக வளரக்கூடிய சூழ்நிலை இருப்பதால், அந்த மாதிரி யான வெளிநாடுகளுடன் தொடர்புகொண்டு அதற்கான தனி ஆராய்ச்சியாளர்களை அனுப்பி, அந்த முறையில் சந்தன மர நாற்றுகள் உருவாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலே இது போன்ற ஆராய்ச்சிகள் நடைபெற்று அவை வெற்றிபெற முடிய வில்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகையில் விஞ்ஞானம் வளர்ந்து கொண்டிருக்கிற நேரத்தில் இந்த மாதிரி சாதனை களைச் செய்ய முடியாதா என்று கேட்டார். என்னதான் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்திருந்தாலும்கூட, இன்றைக்கு கேன்சர் வியாதியை உடனடியாகக் குணப்படுத்தக் கூடிய சூழ்நிலை இல்லை. இதைப்போன்று, தவிர்க்க முடியாத இயற்கையாக வளர்கின்ற மரங்களை, நாம் எவ்வளவுதான் ஆராய்ச்சி செய்தாலும், அது வெற்றிகரமாக அமையக் கூடிய வாய்ப்பில்லாமல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.வி.கே. சின்னசாமி சந்தனக் கட்டையைப் பற்றி மட்டும் பேசவேண்டும்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரத்தைப் பற்றித்தான் பேசுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும் போது இங்கே குறிப்பிட்டார்கள். விவசாயிகளுக்கு நாற்றுக் கூட நாங்கள் தருவது இல்லை. அது இயற்கையாக வளரக்

1993 ஏப்ரல் 29]

கூடியது என்று சொன்னார்கள். இப்படி இருக்கும்போது வீரபாண்டியக் கட்டபொம்மன் சினிமாப் படத்திலே வரும் பாட்டுத்தான் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏதாவது பொருந்துகிற வகையிலே நீங்கள் சொல்லவேண்டும். அதற்கும், இதற்கும் பொருந்தாது.

திரு. வி. கே. சின்னசாமி : இயற்கையாகவே வளரும் மரங்களை அந்த விவசாயிகளே முழுப் பங்கையும் வெட்டி எடுத்துக் கொள்ளலாம் என்ற உத்தரவை அமைச்சர் அவர்கள் இப்போது சொன்னார்கள். பாதி விவசாயிக்கும், மீதி அரசுக்கும் சேர வேண்டும், மரத்தினுடைய விலை சேரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த முழுப் பங்கையும் விவசாயிகளே வைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை ** இந்தக் கருத்தின் அடிப்படையில் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கிஸ்திக்குத்தான் பொருந்துமே தவிர, எல்லாவற்றிற்கும் பொருந்தும் என்று நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. அவைக் குறிப்பிலிருந்து அது நீக்கப்படுகிறது.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாடலை நீக்கிய காரணத்தால் நான் பாடலைப் பற்றி மீண்டும் பேச வேண்டிய தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறபோது, அதற்கு ஏர் உழுதாயா என்று எல்லாம் கேட்டார்கள். ஏர் உழாமலே வரக் கூடிய இயற்கை மரம். கஞ்சி சுமக்கத் தேவையில்லை. இயற்கையாக வரக்கூடிய மரங்கள். ஆகவே, இவர் சொன்னதைப் போல அதற்குத் தண்ணீர் பாய்ச்சியோ, உழுதோ வரக்கூடிய மரங்கள் அல்ல அவை. ஆகவேதான், அரசு சில விதிமுறைகளை வைத்திருக்கிறது. சந்தன மரங்களைப் பொறுத்தவரையில் 47.5 விழுக்காடு, நாமே அந்தத் தொகையைத் தந்து அவர்களிடத்திலேயிருந்து அரசு பெற்றுக்கொண்டு, அரசின் சார்பாகத்தான் தனியாருக்கு விற்கப்படுகிறது. வேறு ஒருவருக்கு விற்கக்கூடாது. விதிமுறைகள் இருக்கின்றன. மேல் நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று சொன்னால், அரசின் சார்பாகத்தான் ஏற்றுமதி செய்யவேண்டும். சில குறிப்பிட்ட மரங்கள் இதுபோன்ற சந்தன மரங்கள், யானைத் தந்தங்கள் போன்றவற்றை அரசே ஏற்றுத்தான் நடைமுறைப்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால் தனியார் விற்பதற்கு அனுமதி அளிக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

[1993 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மலைகளிலேதான் சந்தன மரங்கள் இயற்கையாக வளர்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார். வளர்ந்து வருகிற விஞ்ஞான உலகத்தில், கடலிலே கூட நெல் விளைவிக்கின்றார்கள். ஜப்பானிலே கடலிலேகூட நெல் விளைவிக்கிறார்கள். அப்படி தமிழ்நாட்டிலும் விஞ்ஞான ஆக்கப்பூர்வ சிந்தனையோடு, அக்கிரிகல்சுரல் காலேஜ் போன்ற விவசாய விஞ்ஞான கூடங்களிலே ஆராய்ச்சி செய்து கருவேல மரங்களை குளங்களிலே வளர்க்கிறோம் அல்லவா, அதற்குப் பதிலாக அரசே சந்தன மரங்களை கருவேல மரங்களுக்குப் பதிலாக குளங்களிலே வளர்க்கின்ற முயற்சியை ஆராய்ச்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருவேல மரங்கள் போன்று சந்தன மரங்களை வளர்க்க முடியாது. நாம் கோவையிலே இருக்கிற ஆராய்ச்சிப் பண்ணையில் இதை ஆராய்ச்சி செய்து மரங்களை நட்டு வளர்க்க முடியுமா என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்தோம். அது வெற்றிகரமாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறபோது பல்வேறு ஆராய்ச்சிகளைப் பற்றி குறிப்பிட்டார். இன்றைக்குக்கூட கேன்சர் வருகிறது என்று சொன்னால், அதை நம்மால் ஆராய்ச்சி செய்து, பல்வேறு விஞ்ஞானங்கள் வளர்ந்து இருந்தாலும்கூட, வெற்றிகரமாக அதை குணப்படுத்த முடியவில்லை. இதுபோன்ற சில இயற்கைச் சக்திகள் இருக்கிறபோது, அரசாலும், ஆராய்ச்சியாலும், வெற்றி பெற முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 526, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

526—

பேருந்துகளில் படிக்கட்டுகளில் பயணம் செய்வோர்மீது கடுமையான நடவடிக்கை.

*11671—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :
மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேருந்துகளில் படிக்கட்டுகளில் நின்றுகொண்டு பயணம் செய்யும் பயணிகள்மீதும் அனுமதிக்கின்ற நடத்துனர்மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?